
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 155 | 4 Pages | 2.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 155 | 4 பக்கங்கள் | 2.1.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை**

**விளக்கம்:**
தன்உயிர்உடம்பிலிருந்துநீங்கிச்செல்வதாகஇருந்தாலும், அதைத் தடுப்பதற்காகத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது.

## கேரளா: மேடையில் இருந்து கீழே விழுந்த காங். பெண் எம்.எல்.ஏ. மருத்துவமனையில் தீவிர சிகிச்சை



கோழிக்கோடு, ஜன.2

கேரள மாநிலம் கொச்சியில் உள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் பரத நாட்டியம் நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் விஐபிக்கள்அமர்வதற்காக 15 அடி உயர மேடை போடப்பட்டிருந்தது. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னதாக காங்கிரஸ் எம்.எல்.ஏ. உமா தாமஸ் மேடைக்கு வந்துள்ளார்.

அப்போது, எதிர்பாராத விதமாக மேடையில் இருந்து கீழே விழுந்த அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தலையில் எலும்பு முறிவு, ரத்த கசிவு ஏற்பட்டிருப்பது பரிசோதனையில் தெரிய வந்தது. சுயநினைவை இழந்துள்ள உமாதாமஸுக்கு தொடர்ந்து வெண்டிலேட்டர் உதவியுடன் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதையடுத்து மருத்துவர்களுடன் கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ், தொழில்துறை அமைச்சர் ராஜீவ் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.

இந்த நிலையில், மேடையில் நிற்பதற்கு போதுமான இடம் ஒதுக்காததே உமா தாமஸ் கீழே விழுவதற்கு காரணம் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது வழிகாட்டு நெறிமுறைகள் மீறப்பட்டதாக கொச்சி போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## சிறுசேமிப்பு திட்ட வட்டியில் மாற்றமில்லை மத்திய அரசு அறிவிப்பு




புதுடெல்லி, ஜன.2

வங்கிகள் மற்றும் தபால் நிலையங்களில் நடைமுறையில் உள்ள சிறு சேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை 3 மாதங்களுக்கு ஒருதடவை மத்திய அரசு மாற்றி அமைத்து வருகிறது. நடப்பு நிதியாண்டின் 4வது காலாண்டுக்கான (ஜனவரி 1ந் தேதி முதல் மார்ச் 31ந் தேதிவரை) சிறுசேமிப்பு திட்ட வட்டிவிகிதம் குறித்த அறிவிப்பை மத்திய நிதி அமைச்சகம் நேற்று வெளியிட்டது.

சிறுசேமிப்பு திட்ட வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும், முந்தைய காலாண்டில் அமலில் இருந்த வட்டி விகிதமே நீடிக்கும் என்றும் கூறியுள்ளது.

எனவே, செல்வமகள் சேமிப்பு திட்டத்துக்கு 8.2 சதவீதம், தேசிய சேமிப்பு பத்திரத்துக்கு 7.7 சதவீதம், கிசான் விகாஸ் பத்திரத்துக்கு 7.5 சதவீதம் என அனைத்துக்கும் பழைய வட்டிவிகிதங்களே நீடிக்கும். இதன்மூலம், கடந்த 4 காலாண்டுகளாக வட்டி விகிதம் மாற்றப்படவில்லை.

## காரில் மதுபானம் குடித்த 2 பேரை கண்டித்த கான்ஸ்டபிள் டெல்லியில் படுகொலை; 400 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல்



புதுடெல்லி, ஜன.2

டெல்லியின் நங்லோய் பகுதியில் நள்ளிரவில் கார் ஒன்றில் 2 பேர் அமர்ந்தபடி மதுபானம் குடித்து கொண்டு இருந்துள்ளனர். அந்த வழியே வந்த கான்ஸ்டபிள் சந்தீப் மாலிக் இதனை பார்த்ததும், அவர்களை கண்டித்துள்ளார்.

இதனால், இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்கள் போதையில், சந்தீப்பின் பைக் மீது காரை கொண்டு ஏற்றினர். 10 மீட்டர் தொலைவுக்கு பைக்கை காருடன் இழுத்தபடி சென்றுள்ளனர். இதனை எதிர்பாராத சந்தீப்புக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சந்தீப்பை மற்ற போலீசார் மீட்டு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

எனினும், அவர் உயிரிழந்து விட்டார் என போலீசாரிடம் டாக்டர்கள் தெரிவித்தனர். இதுபற்றிய காட்சி ஒன்று அதிகாலை 2.15 மணியளவில் சி.சி.டி.வி.யில் பதிவாகி இருந்தது. இதுபற்றி விசாரணை நடத்திய போலீசார் டிஸ் ஹசாரி கோர்ட்டில் 3 நாட்களுக்கு முன் 400 பக்க குற்றப்பத்திரிகை ஒன்றை தாக்கல் செய்தனர்.

இதன்படி, சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் தர்மேந்தர் (வயது 39) மற்றும் ரஜ்னீஷ் (வயது 25) என அடையாளம் காணப்பட்டு உள்ளது. அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு உள்ளனர். இவர்கள் தவிர ஜிதேந்தர் மற்றும் மனோஜ் ஷேர்மேன் 2 பேரின் பெயர்களும் குற்றப்பத்திரிகையில் இடம் பெற்றுள்ளன.

கான்ஸ்டபிள் மற்றும் அவருடைய குடும்பத்தினருக்கு நீதியை உறுதி செய்யும் வகையில் குற்றப்பத்திரிகை தயார் செய்யப்பட்டு உள்ளது என மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். குற்றவாளிகளுக்கு சந்தீப்பை நன்றாக தெரியும் என்றும் அவர்கள் வசித்த பகுதியிலேயே 2 பேரும் வசித்து வருகின்றனர் என்றும் விசாரணை முடிவுகள் தெரிவிக்கின்றன.

# திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிட்டார் முதல்வர்

கன்னியாகுமரி, ஜன.2

கன்னியாகுமரியில் கடல் நடுவே அமைந்துள்ள பாறைகளில் விவேகானந்தர் நினைவு மண்டபம், 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதனை தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் படகில் சென்று பார்வையிட்டு வருகிறார்கள்.

இதில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. கடந்த 2000ம் ஆண்டு ஜனவரி 1ந்தேதி அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்.

வருகிற 1ந்தேதி இந்த சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெறுவதையொட்டி வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது.




திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு கன்னியாகுமரி நகர் முழுவதும் கொடி, தோரணங்கள் மற்றும் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அரசு கட்டிடங்கள் மற்றும் பூங்காக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் கன்னியாகுமரி நகர் முழுவதும் விழாக் கோலம் பூண்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 2500 போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

திருவள்ளுவர் சில வெள்ளி விழாவை முன்னிட்டு நேற்று கன்னியாகுமரியில் கண்ணாடி இழை பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். முதலமைச்சருடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, சேகர் பாபு, எம்பி டி. ஆர்.பாலு, எம்.பி கனிமொழி உள்ளிட்டோரும் இருந்தனர்.

இதையடுத்து திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவின் இன்று 2வது நாள் நிகழ்ச்சியில் திருக்குறள் கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். கண்காட்சியை தொடங்கி வைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளுவர் தோரண வாயிலுக்கும் அடிக்கல் நாட்டினார். திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின் பரிசு வழங்கி வெள்ளி விழா சிறப்பு மலரையும் வெளியிட்டார்.

## சமூக நீதி, மத நல்லிணக்கம், சமத்துவம் என முற்போக்குப் பாதையில் பயணிப்போம் என்ற உறுதியோடு புத்தாண்டை வரவேற்போம்: துணை முதல்வர் உதயநிதி அறிக்கை

சென்னை, ஜன.2

"சமூக நீதி, மத நல்லிணக்கம், சமத்துவம் என முற்போக்குப் பாதையில் பயணிப்போம் என்ற உறுதியோடு புத்தாண்டை வரவேற்போம். பிறக்கின்ற 2025 புத்தாண்டில் அனைவரின் வாழ்விலும் புத்தொளி வீசட்டும்" என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் துணை முதல்வர் தெரிவித்துள்ளதாவது; '2024ஆம் ஆண்டு பல்வேறு புதுமைகளையும் – அனுபவங்களையும் நினைவுகளையும் நமக்குத்தந்துவிட்டு விடைபெறுகிறது. 2025ஆம் ஆண்டு புத்தாண்டில், முக்கடல் கூடும் குமரியில் நம் 'திராவிட மாடல் அரசு' நடத்திய 'திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா'விலிருந்து தொடங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு 2024இல் தமிழ்நாட்டின் ஏற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட திட்டங்களை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் சென்றிருக்கிறது.



2024இன் தொடக்கத்திலேயே லட்சோப லட்சம் இளைஞர்கள் பங்கேற்புடன் இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் வகையில், மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் கழக இளைஞர் அணியின் மாநில மாநாட்டை நடத்தியதை, இன்று நினைத்துப் பார்க்கிறோம்.

2024 மக்களவைத் தேர்தல் களத்தில், தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் பாசிச சக்திகளையும் அடிமைகளையும் வீழ்த்தி, இந்தியாவின் ஜனநாயகத்தையும் மதச்சார்பின்மையையும் நம் கழகம் பாதுகாத்தது.

முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில், தமிழ்நாடெங்கும் துறை ரீதியிலான ஆய்வு, மக்கள் நலத்திட்டங்கள் வழங்குதல் – புயல், மழை நேரத்தில், மக்களுடன் களப்பணியாற்றிய தருணங்கள் என, ஒரு நாளில் 24 மணி நேரம் போதவில்லை என்கிற அளவுக்கு 2024இல் சுற்றிச்சுழன்று பணியாற்றியிருக்கிறோம்.

கலைஞர் நூற்றாண்டில் கழக இளைஞர் அணி சார்பில் 'என் உயிரினும் மேலான' பேச்சுப் போட்டியை நடத்தி, 182 இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து, கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். 100க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில், கலைஞர் நூலகங்களைத் திறந்திருக்கிறோம். இந்தப் பணிகள் அனைத்தும் புதிய உத்வேகத்துடன் பிறக்கும் 2025ஆம் ஆண்டிலும் தொடரும்! நம் கழகத்தையும் கழக அரசையும் நம் தலைவர் அவர்களையும் தமிழ்நாட்டின் மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உழைப்பால், கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் வியர்வையால், தியாகத்தால் உண்டான பந்தம். புழுதிகளால் சூரியனை மறைக்க முடியாது.

2026இல் நம் கழகக் கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் பெறவிருக்கும் மாபெரும் வெற்றிக்கு 2025ஆம் ஆண்டு நாம் ஆற்றப் போகும் களப்பணி ஆதாரமாக விளங்கட்டும்!

தொடங்கும் புத்தாண்டிலும் தமிழ்நாட்டில் பாசிச சிந்தனைகளுக்கு இடமளிக்காமல் – தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய சமூக நீதி, மத நல்லிணக்கம், சமத்துவம் என்ற முற்போக்குப் பாதையில் தொடர்ந்து கழகத் தலைவர் அவர்களின் கரம் பற்றி நாம் பயணிப்போம் என்கிற உறுதியோடும் நம்பிக்கையோடும் புத்தாண்டை வரவேற்போம்" என தெரிவித்துள்ளார்.

## பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான கரும்புகளை அந்தந்த மாவட்ட விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டும்: தமிழ்நாடு அரசு

சென்னை, ஜன.2

பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான கரும்புகளை அந்தந்த மாவட்ட விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை ஒட்டி பரிசுத் தொகுப்பு கொள்முதல் செய்ய வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. அதில்; பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான கரும்பு கொள்முதல் செய்ய அரசு ரூ.77 கோடி ஒதுக்கியது.

பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான கரும்புகளை அந்தந்த மாவட்ட விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய வேண்டும். கரும்புகளை அந்தந்த மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். கரும்பு கொள்முதல் செய்வதில் விவசாயிகள் தரப்பில் இருந்து எந்த புகார்களுக்கும் இடமளிக்கக் கூடாது. இடைத்தரகர்கள், வியாபாரிகள், பிற மாநிலங்களில் இருந்து கரும்பு கொள்முதல் செய்யக்கூடாது. கரும்பு விளைவிக்கப்படாத மாவட்டங்களுக்கு அருகாமையில் உள்ள மாவட்டங்களில் இருந்து கரும்பு கொள்முதல் செய்யலாம். ஒரு கிராமத்தில் ஒரே விவசாயியிடம் இருந்து ஒட்டு மொத்தமாக கரும்பு கொள்முதல் செய்யக்கூடாது. கரும்பு கொள்முதல் செய்யும்போது சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

கொள்முதல் செய்த கரும்புக்கு அந்தந்த விவசாயிகளின் வங்கி கணக்குக்கு மின்னணு பண பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.



## விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக மாணவர்களின் விவரத்தை சரிபார்க்க தொடக்கக் கல்வித்துறை அறிவுரை

சென்னை, ஜன.2

இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்களை எமிஸ் தளத்தில் உறுதி செய்ய வேண்டுமென தொடக்கக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் 201213ம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வரும் கல்வியாண்டின்(202526) முதல் பருவத்தில் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்கான உத்தேச தேவைப் பட்டியல் எமிஸ் தளத்தின் மூலம் பெறப்பட்டு, மாணவர்கள் எண்ணிக்கை விவரம் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்துக்கு வழங்கப்பட உள்ளது. எனவே, தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களின் விவரங்களும் எமிஸ் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பது சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் மாவட்டக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறிமுகமில்லாத எண்களில் இருந்து வரும் லிங்க்களை கிளிக் செய்ய வேண்டாம் போலீசார் எச்சரிக்கை



நெல்லை, ஜன.2

அறிமுகம் இல்லாத எண்களிலிருந்து புத்தாண்டு வாழ்த்துகள் சொல்லும் செயலிக்கான ஆப் லிங்க் வந்தால் அதை கிளிக் செய்ய வேண்டாம் என்று காவல்துறை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக திருநெல்வேலி சைபர் கிரைம் காவல்துறை வெளியிட்டிருக்கும் செய்திக்குறிப்பில், இணையதளத்தில் தற்போது செயல்பட்டு வரும் புத்தாண்டு வாழ்த்து செயலி (apk file) மோசடி அனைத்து இடங்களிலும் நடைபெற்று கொண்டு இருக்கிறது.

மோசடி நடைபெறும் விதம் எப்படி என்றால், உங்களது வாட்ஸ்அப் எண்ணுக்கு அறிமுகமில்லாத எண்ணிலிருந்து புத்தாண்டு வாழ்த்துக்கள் என ஒரு apk file அல்லது link செய்தி வரும் அந்த செய்தியில் உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோருக்கு புத்தாண்டு வாழ்த்து அட்டை அனுப்பலாம் என அதில் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

நீங்கள் அந்த apk fileஐ ஓபன் செய்துவிட்டால் உங்களது போனில் உள்ள தரவுகள் திருடப்பட்டு உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எடுக்கப்படும். மேலும் உங்களது வங்கிக் கணக்கு தொடர்பான விவரங்களை தெரிந்து கொண்டு பண மோசடி செய்து விடுவார்கள்.

எனவே வாட்ஸ் அப்பில் வரும் இதுபோன்று அறிமுகமில்லாத எண்ணிலிருந்து புத்தாண்டு வாழ்த்துகளை தவிர்க்க வேண்டும். அந்த எண்ணிற்கு மொபைல் போன் மூலமாக அழைத்து விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை, எதிர்பாரா தவிதமாக நீங்கள் பாதிக்கப்பட்டால், சைபர் கிரைம் இணையதளமான cybercrime.gov.in அல்லது 1930 எண்ணை தொடர்பு கொண்டு உடனடியாக புகார் அளிக்கவும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோவில் கும்பாபிஷேகம் எப்போது? அமைச்சர் சேகர்பாபு தகவல்



திருச்செந்தூர், ஜன.2

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு வந்தார். அவர் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.

கோவில் வளாகத்தில் நடைபெற்றுவரும் பெருந்திட்ட வளாக பணிகளை அவர் ஆய்வு செய்தார். தொடர்ந்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. நடைபெற்றுவரும் பெருந்திட்டவளாக பணிகளில் 20 பணிகளை ஹெச்.சி.எல். நிறுவனம் செய்து வருகின்றது. அதில் மூன்று பணிகள் நிறைவுற்று திறப்பு விழா நடைபெற்று உள்ளது.

அதேபோல் ராஜகோபுரம் பணி முடியும் தருவாயில் உள்ளது. வருகிற 20ந் தேதி 7 கோபுரங்களுக்கு பாலாலயம் நடைபெற உள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வரைவு திட்டத்தின் படி பக்தர்கள் தங்க 122 அறைகள் கட்டப்பட உள்ளன. இதில் 56 பக்தர்கள் தங்கும் அறைகளை ஆய்வு செய்தோம். இந்தப் பணிகள் மார்ச் மாதத்துக்குள் முடிவுற்று தமிழக முதலமைச்சரால் திறக்கப்பட உள்ளது.

மொத்தம் 43 பணிகள் என்றாலும் அவை ஒவ்வொன்றாக முடிந்ததும், பக்தர்களின் தேவையை கருத்தில் கொண்டு திறப்பு விழாக்கள் தொடர்ந்து நடைபெறும். வருகிற ஜூலை மாதம் 7ந் தேதி கும்பாபிஷேகம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது ஹெச்.சி.எல். நிறுவனம் எடுத்துக்கொண்ட பணிகள் 60 சதவீதத்தை தாண்டியுள்ளது. கோவில் சார்பில் நடைபெற்று வருகின்ற பணிகள் 43 சதவீதத்தை தாண்டியுள்ளது. பணிகள் அனைத்தும் விரைவாக நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் 2025ம் ஆண்டுக்குள் முடிந்துவிடும்.

இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

# நாடு முழுவதும் களைகட்டிய புத்தாண்டு கொண்டாட்டம்.. 2025ம் ஆண்டை உற்சாகமாக வரவேற்ற மக்கள்



சென்னை, ஜன.2

நாடு முழுவதும் கொண்டாட்டத்துடன் புத்தாண்டை மக்கள் வரவேற்றனர்.

தமிழகத்தில் சென்னை உட்பட பல இடங்களில் மக்கள் புதிய ஆண்டை வரவேற்றனர். ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ம் தேதி ஆங்கில புத்தாண்டாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2024ம் ஆண்டு நிறைவடைந்து 2025ம் ஆண்டு பிறந்துள்ளது.

புத்தாண்டு தினத்தை அடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாட்டங்கள் களைகட்டின. தலைநகர் டெல்லி முதல் சென்னை வரை கொண்டாட்டங்களில் மக்கள் மூழ்கினர். சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் ஆட்டம், பாட்டத்துடன் மக்கள் புத்தாண்டை வரவேற்றனர்.

புத்தாண்டையொட்டி இந்தியாவில் உள்ள வழிபாட்டு தலங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் அதிகாலையில் இருந்து வழிபாட்டு தலங்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

'மாலைமலர்' சார்பில் அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

# வெளிநாட்டு ஆன்மிக பயணம் அழைத்து செல்வதாக கோவையை சேர்ந்த 66 பேரிடம் ரூ.36 லட்சம் மோசடி

கோவை, ஜன.2

கோவை தெற்கு உக்கடம் அமீன் காலனி 3வது வீதியை சேர்ந்தவர் அப்துல் ஹமீது. இவரது மனைவி அமீதா(வயது62).

இவர் கோவை பெரிய கடைவீதி போலீசில் புகார் அளித்தார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது:

எனக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு, சென்னை புரசைவாக்கம், பெருமாள்பேட்டை பகுதியைச் சேர்ந்த தொழில் அதிபரான ஜாபர் அலி என்பவர் அறிமுகம் ஆனார்.

இவர் வெளிநாட்டிற்கு ஆன்மிக பயணம் அழைத்து சென்று வரும் பணி செய்து வருவதாக என்னிடம் தெரிவித்தார்.

மேலும் ஆன்மிக பயணம் செல்வதற்கான ஏற்பாடுகளை நான் செய்து வருகிறேன். யாராவது அங்கு செல்ல விரும்பினால் என்னிடம் தெரிவியுங்கள். நான் அவர்களை அழைத்து செல்கிறேன் என தெரிவித்தார்.

இதனை நம்பி நானும் எனக்கு தெரிந்தவர்களிடம் தெரிவித்தேன். அத்துடன் 66 பேர் பயணம் செல்ல விரும்புவதாக கூறி என்னிடம் ரூ.36 லட்சத்து 51 ஆயிரம் பணத்தை கொடுத்தனர். நானும் அந்த பணத்தை வாங்கி ஜாபர் அலியின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன்.

ஆனால் நீண்ட நாட்கள் ஆகியும் ஜாபர் அலி ஆன்மிக பயணத்துக்கான ஏற்பாடுகளை செய்ய வில்லை. இதனால் என்னிடம் பணம் கொடுத்தவர்கள், பயணம் என்ன ஆனது என கேள்வி கேட்க ஆரம்பித்தனர். மேலும் எங்களது பணத்தையும் திரும்ப பெற்று தருமாறு தெரிவித்தனர்.

இதையடுத்து நான், ஜாபர் அலியிடம் இதுகுறித்து கேட்டபோது அவர் சரியாக பதில் அளிக்க வில்லை.

நான் பணத்தை திருப்பி தருமாறு கேட்டேன். ஆனால் பணத்தையும் தர மறுத்து அவர் ஏமாற்றி விட்டார். எனவே வெளிநாட்டு ஆன்மிக பயணம் அழைத்து செல்வதாக கூறி, மோசடியில் ஈடுபட்ட ஜாபர் அலி மீது நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுத் தர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார். அவரது புகாரின் பேரில் போலீசார் சென்னையைச் சேர்ந்த ஜாபர் அலி மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பா.ஜ.க. மகளிர் அணி சார்பில் மதுரை To சென்னை வரை நீதிப்பேரணி அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, ஜன.2

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில்,

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நேர்ந்த கொடுமையைக் கண்டித்தும், குற்றவாளி திமுகவைச் சேர்ந்தவன் என்பதால், முழு உண்மைகளையும் வெளிக்கொண்டு வராமல் மறைக்க திமுக அரசு முயற்சி செய்வதையும் கண்டித்து, தமிழக பா.ஜ.க. மகளிர் அணி சார்பில், மாநிலத் தலைவர் உமாபாரதி தலைமையில், மதுரையில் இருந்து சென்னை வரை, நீதிப்பேரணி நடைபெறவுள்ளது.

வரும் ஜனவரி 3 அன்று தொடங்கவிருக்கும் இந்தப் பேரணி, சென்னையில் நிறைவு பெறும் போது தமிழக கவர்னரை சந்தித்து பாஜ.க. மகளிர் அணி சார்பில் தங்கள் கோரிக்கை மனுவை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

# சென்னையில் தொழில் வரி 35 சதவீதம் உயர்வு அமல்




சென்னை, ஜன.2

சென்னை மாநகராட்சியில் தொழில் வரி மிகப்பெரிய வருமானமாக உள்ளது. 20232024ம் ஆண்டில் தொழில் வரி மட்டும் ரூ.532 கோடி கிடைத்துள்ளது.


இந்த நிலையில் தொழில் வரியை மாநகராட்சி உயர்த்தி இருக்கிறது. 35 சதவீதம் வரி உயர்த்தப்பட்டுள்ளது.

தொழில் வரி என்பது 6 மாதத்துக்கு ஒருமுறை செலுத்த வேண்டும். 6 மாதத்துக்குள் ரூ.21 ஆயிரம் வருமானம் ஈட்டுபவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ரூ.21 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரம் வருமானம் ஈட்டுபவர்களுக்கு ரூ.135ல் இருந்து ரூ.180 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.30,001 முதல் ரூ.45 ஆயிரம் வரை வருமானம் ஈட்டுபவர்களுக்கு ரூ.315ல் இருந்து ரூ.425 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது வருடத்துக்கு ரூ.630 கட்டியவர்கள் இனி ரூ.850 கட்ட வேண்டும். அதே போல ரூ.45,001 முதல் ரூ.60 ஆயிரம் வரை வருமானம் ஈட்டுபவர்கள் ரூ.690க்கு பதில் ரூ.930 கட்ட வேண்டும்.

ரூ.60,001 முதல் ரூ.75 ஆயிரம் வரையிலும், அதே போல் ரூ.75 ஆயிரத்துக்கு மேல் வருமானம் ஈட்டுபவர்களும் பழைய வரியை கட்டினால் போதும். அவர்களுக்கு வரி உயர்த்தப்படவில்லை.

இந்த வரி உயர்வுக்கு மாநகராட்சி கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரையாண்டு முதல் இந்த வரி உயர்வு அமலுக்கு வருகிறது.

# குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



தென்காசி, ஜன.2

தென்காசி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலத்திற்கு மேலாக கடுமையான வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மதியத்திற்கு மேல் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பரவலாக மிதமான மழை பெய்தது.

இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. மேலும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் தொடர்ந்து மிதமான மழை பெய்ததன் காரணமாக குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது.

மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்ட நிலையில் இரவிலும் வனப்பகுதியில் மழை பெய்ததால் மெயின் அருவியில் தண்ணீர் பாதுகாப்பு வளைவைத்தாண்டி ஆர்ப்பரித்து கொட்டியது.

இதனால் பாதுகாப்பு கருதி மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. மெயின் அருவியில் குளிப்பதற்கு வந்த சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

மேலும் இன்று காலையில் வானம் மேகமூட்டத்துடன் மிதமான சாரல் மழை விட்டு விட்டு பெய்து வருவதால் குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மெயின் அருவி பகுதியில் பாதுகாப்பு பணிக்கு போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பழைய குற்றால அருவி பகுதியை சுற்றி சேதம் அடைந்த பாதுகாப்பு கம்பிகள் அனைத்தும் மீண்டும் அமைப்பதற்கான பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# 2025 புத்தாண்டு இந்து கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு வழிபாடு



சென்னை, ஜன.2

2024ம் ஆண்டு இன்று நிறைவு பெறுகிறது. இன்று நள்ளிரவு 2025 புத்தாண்டு பிறக்கிறது.

2025ல் செல்வம், வெற்றி, திருமணம் உள்பட முக்கிய நிகழ்வுகள், பிரார்த்தனைகள் அனைத்தும் எந்தவித தடையுமின்றி நிறைவேற வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பாகவும், கனவாகவும் உள்ளது.

இதை கருத்தில் கொண்டு புத்தாண்டு பிறக்கும் நள்ளிரவு 12 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் செய்வதை வழக்கத்தில் வைத்துள்ளனர்.

அதன்படி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இந்து கோவில்கள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட உள்ளது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இன்று இரவு வழிபாட்டு தலங்களில் திரள்வார்கள் என்பதால் அதற்கு ஏற்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பக்தர்கள் வரிசையில் செல்ல தடுப்புகம்புகள் கட்டி வைத்துள்ளனர்.

போலீசார் சாதாரண உடைகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.

# தெற்கு ரெயில்வேயில் புதிய கால அட்டவணை அமல்




சென்னை, ஜன.2

ரெயில்வேயில் ஆண்டுதோறும் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் விரைவு மற்றும் பயணிகள் ரெயில்களுக்கான புதிய கால அட்டவணை வெளியிடப்படும். இந்த நிலையில் 2024ம் ஆண்டுக்கான ரெயில்வே புதிய கால அட்டவணை சில காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டு, நாளை ஜனவரி 1ந்தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தெற்கு ரெயில்வே புதிய கால அட்டவணை நாளை (ஜனவரி 1ந்தேதி) முதல் அமலாக உள்ளது. இதில் புதிய ரெயில்கள், ரெயில்களின் சேவை நீட்டிப்பு, வேகம் உள்ளிட்ட சிறப்பு அம்சங்கள் இடம் பெற்று உள்ளன. அதன் விவரம் வருமாறு:

ஆகஸ்டு 31ந்தேதி அறிமுகப்படுத்தப்பட்ட சென்னை எழும்பூர்நாகர் கோவில் இடையேயான சென்னை எழும்பூர் வந்தே பாரத் ரெயில் (20627 20628), மார்ச் 12ந்தேதி அறிமுகப்படுத்தப்பட்ட சென்னை சென்ட்ரல் மைசூரு இடையே ஓடும் மைசூர் வந்தே பாரத் ரெயில் (206320664) உள்பட 8 புதிய ரெயில்களின் அறிமுகம் இடம் பெற்றுள்ளன.

கடந்த மே 2ந்தேதி முதல் சென்னை கடற்கரைவேலூர் கன்டோன்மெண்ட் மெமு விரைவு ரெயில் திருவண்ணாமலை வரை நீட்டிப்பு. ஜூலை 12ந்தேதி முதல் சென்னை சென்ட்ரல் சத்யா சாய் பிரசாந்தி நிலையம் சென்னை சென்ட்ரல் இடையேயான வாராந்திர விரைவு ரெயில் (12691 12692) ஷிவி மொக்காடவுன் வரை நீட்டிப்பு உள்பட 19 ரெயில்கள் செல்லும் வழித்தடங்களில் நகரங்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளன.

சென்னை சென்ட்ரல் மைசூரு விரைவு ரெயிலின் எண் (12609) மாற்றப்பட்டு புதிய எண் (16551) வழங்கப்பட்டுள்ளது. மைசூருசென்னை சென்ட்ரல் விரைவு ரெயிலின் எண் (12610) மாற்றப்பட்டு புதிய எண் (16552) வழங்கப்பட்டு உள்ளது. இது தவிர 14 ரெயில்களின் எண்கள் மாற்றப்பட்டுள்ளன. 45 ரெயில்களுக்கு சோதனை அடிப்படையில் கூடுதல் நிறுத்தங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

கன்னியாகுமரி நிஜாமுதீன் இடையேயான வாரம் இருமுறை ஓடும் விரைவு ரெயில் (12641) உள்பட 56 அதிவிரைவு ரெயில்களின் வேகம் 10 முதல் 85 கி.மீ. வரை அதிகரித்து இயக்கப்பட உள்ளது. இதுபோல 46 மெயில், விரைவு ரெயில்களின் வேகமும் அதிகரிக்கப்பட்டு உள்ளது. ரெயில்வேயின் புதிய கால அட்டவணை தொடர்பான அறிவிப்பில், 14 ரெயில்களின் எண்கள் மாற்றம் மட்டுமே புதியதாக இடம் பெற்றுள்ளது.

மற்றபடி பெரும்பாலானவை ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு, அமல்படுத்தப்பட்டவையாக உள்ளன. இது பயணிகள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

# அகழாய்வில் அரிதான சுடுமண் ஆட்டக்காய் கண்டெடுப்பு



விருதுநகர், ஜன.2

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அகழாய்வில் இது வரை 16 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. அதில் ஏராளமான சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், செப்புக்காசுகள், வேட்டைக்கு பயன்படுத்திய பழங்கால கருவிகள் உள்பட 2,700க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இன்றைய அகழாய்வு பணியின் போது, சுடுமண்ணால் ஆன நீள் வட்டம், கூம்பு வடிவம் மற்றும் அல்லிமொட்டு வடிவங்களில் ஆட்டக்காய்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அல்லிமொட்டு வடிவ ஆட்டக்காயில், தயாரித்தவர்களின் கைரேகை பதிவாகியுள்ளது. கைரேகை பதிவான நிலையில் ஆட்டக்காய் அரிதாக கிடைத்துள்ளதாக தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்: கோவையில் த.வெ.க.வினர் 81 பேர் மீது வழக்கு



கோவை, ஜன.2

தமிழ்நாட்டில் பாலியல் சம்பவங்களை கண்டித்தும், மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்தும் த.வெ.க தலைவர் விஜய் எழுதிய நோட்டீசை அந்த கட்சியினர் மாணவ, மாணவிகளிடம் வினியோகம் செய்து வருகிறார்கள்.

சென்னையில் உள்ள ஒரு கல்லூரியில் நோட்டீஸ் வினியோகம் செய்த போது, கட்சியின் பொதுச் செயலாளர்புஸ்ஸிஆனந்த் கைது செய்யப்பட்டார்.

இதனை கண்டித்து தமிழக வெற்றிக்கழகத்தினர் நேற்று மாலை கோவை கலெக்டர் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தினர். மாவட்ட நிர்வாகி சம்பத்குமார் தலைமையில் த.வெ.க கட்சியினர் 80க்கும் மேற்பட்டோர் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் 64 ஆண்கள், 17 பெண்கள் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட த.வெ.க கட்சியினர் 81 பேரை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்களை அங்குள்ள மண்டபத்தில் தங்க வைத்தனர். பின்னர் அனைவரையும் விடுவித்தனர்.

இந்த நிலையில் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய தமிழக வெற்றிக் கழகத்தின் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் சம்பத் குமார் மற்றும் நிர்வாகிகள் உள்பட 81 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அனுமதியில்லாமல் கூடி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தல் என்ற பிரிவின் கீழ் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 3 சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த டிரைவர் போக்சோ வழக்கில் கைது

தருமபுரி, ஜன.2

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஆதிதிராவிடர் காலனியை சேர்ந்த பெருமாள் (வயது40) டிரைவர். கருத்து வேறுபாடு காரணமாக, இவரது மனைவி பிரிந்து சென்று விட்டார்.

இந்த நிலையில், தருமபுரிஅருகே ஒருபகுதியைச் சேர்ந்த, சிறுமிகளின் பெற்றோர் நேற்று அதியமான்கோட்டை போலீசில் புகார் அளித்தனர்.

அதில், பெருமாள், 3 சிறுமிகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்ததாக புகார் தெரிவித்தனர். மேலும், சைல்டு ஹெல்ப் லைன் எண்ணிற்கும் புகார் அளித்தனர். அந்த புகார் குறித்து, அதியமான் கோட்டை இன்ஸ்பெக்டர் லதா நேற்று பெருமாளை கைதுசெய்துவிசாரித்தனர்.

மேலும், பெருமாள் மீது கடந்த ஓராண்டிற்கு முன், பெண் ஒருவரை அத்துமீறி பாலியல் தொல்லை செய்ததாக, புகார் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், பெருமாள் அவ்வப்போது மது அருந்திவிட்டு தகராறு செய்வதால், பலர் அச்சமடைந்து அவர் மீது புகார் அளிக்காமல் இருந்துள்ளனர்.

இதில், 3 சிறுமிகள் பாதிப்பு குறித்து புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பலர் புகார் அளிக்க வரலாம் என்பதால், அதியமான் கோட்டை மற்றும் நல்லம்பள்ளி வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுமிகளின் பெற்றோரிடம் ஹெல்ப்லைன் சூப்பர்வைசர் ஜோதி விசாரணை மேற்கொண்டு வருகிறார். பாலியல் தொல்லை குறித்த சம்பவங்கள் தமிழகத்தை உலுக்கி வரும் நிலையில், 3 சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை அளித்த நபர் கைது செய்யப்பட்ட சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஞானசேகரனுடன் பேசிய அந்த SIR யார்? எடப்பாடி பழனிசாமி மீண்டும் கேள்வி



சென்னை, ஜன.2

அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது:

★ அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்தி அதிர்ச்சி தருகிறது.

★ அண்ணா பல்கலைகழக விவாரத்தில் 3 பெண் ஐபிஎஸ்அதிகாரிகள்தலைமையில் குழு அமைத்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

★ ஞானசேகரனுடன் பேசிய அந்த சார் யார்? மாணவி அளித்த புகாரில் தான் இன்னொருவர் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

★ இந்த வழக்கில் உண்மையான குற்றவாளி தப்பித்து விடக்கூடாது.

★ காவல்துறை ஆணையருடன் முரண்பட்டு உயர் கல்வி அமைச்சர் பேசுகிறார்.

★ பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் இத்தனை அமைச்சர்கள் பேசுவதற்கு என்ன காரணம்.

★ யாரை காப்பாற்றுவதற்கு அரசு முயற்சி செய்கிறது? இவ்வளவு பயம் ஏன்?

★பாதிக்கப்பட்ட பெண் அளித்த முதல் தகவல் அறிக்கையில் பதிவிடப்பட்ட அந்த நபரை காப்பாற்றவே தொடர்ந்து அமைச்சர்கள் பேசுகின்றனர்.

★ பொள்ளாச்சி விவகாரத்தில் உடனடியாக சிபிஐ வசம் வழக்கு விசாரணையை ஒப்படைத்தோம்.

★ புதுக்கோட்டை ஆவுடையார் கோவிலில் செவிலியருக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்றுள்ளது.

★ பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் புகாரளித்தாலும் போலீசார் நடவடிக்கை எடுப்பதில்லை.

★ தமிழகம் முழுவதும் பாலியல் வன்கொடுமை, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படுகிறது.

★ ஆட்சி மீதான பழியை மறைப்பதற்காகவே அமைச்சர்கள் மாறிமாறி அறிக்கை வெளியிடுகின்றனர்.

★ போராட்டத்தில் ஈடுபட்ட அதிமுகவினர் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு போடப்பட்டுள்ளதற்கு கண்டனம்.

★ மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் உண்மை குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தரவே அதிமுக போராட்டம் நடத்தியது.

★ போராட்டம் நடத்துவோரை கைது செய்ய 1000 போலீசார் வருகின்றனர், பாலியல் விவகாரத்தில் இந்த வேகத்தை காட்டாதது ஏன்?

★ குமரி கண்ணாடி பாலம்திட்டம்குறித்து மத்திய அரசிடம் நாங்கள் கோரிக்கை விடுத்தோம். மத்திய அமைச்சர்கள் நிதின் கட்கரி, மன்சுக் மாண்டவியாவுடன் இந்த கோரிக்கையை வைத்தோம்.

★ கொரோனா காரணமாக பணிகள் தடைப்பட்ட நிலையில் திமுக ஆட்சியில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றார்.

# கடல் சீற்றத்தால் மண் அரிப்பு தேவனாம்பட்டினம் ஊருக்குள் தண்ணீர் செல்லும் அபாயம்



கடலூர், ஜன.2

வங்கக்கடலில் கடந்த பல நாட்களாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தாழ்வு மண்டலம் மற்றும் புயல் போன்றவற்றால் தொடர்ந்து கடல் அலை அதீத சீற்றமாக காணப்பட்டு வருகின்றது. மேலும் கடலூர் மாவட்டத்தில் தொடர் கனமழை மற்றும் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காரணத்தினால் கடலில் வழக்கத்தை விட அதிக அளவில் தண்ணீர் உட்புகுந்து உள்ளது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரை பகுதியில் வழக்கத்தை விட கடல் சீற்றம் அதிகரித்து காணப்பட்டு வருவதால் கடல் அலை முன்னோக்கி வந்து சென்றதால் மண் அரிப்பு அதிகளவில் ஏற்பட்டு வந்தது. தற்போது நாளுக்கு நாள் சீற்றம் அதிகரித்து காணப்பட்டு வருவதால் சுமார் 40 அடிக்கு கடல் அலை முன்னோக்கி பொதுமக்கள்அமர்வதற்காகஅமைக்கப்பட்ட சிமெண்ட் கற்கள்வரைவந்துசெல்வதை பார்த்த பொதுமக்கள் பீதி அடைந்து உள்ளனர்.

இது ஒரு புறம் இருந்து வரும் நிலையில் மற்றொரு புறம் தேவனாம்பட்டினம் ஊருக்குள் மீன் விற்பனை செய்யும் இடம் உள்ளது. அதன் அருகாமையில் மீன் வலை பின்னும் கட்டிடமும் செயல்பட்டு வருகின்றது. தற்போது கடல் அலை அதிகளவில் சீறி பாய்ந்து வருவதால் பெரிய அளவில் மண் அரிப்பு ஏற்பட்டு வலை பின்னும் கட்டிடம் கடல் அலையில் அடித்து இழுத்து செல்லும் அவல நிலையில் உள்ளது.

இதே நிலை தொடர்ந்தால் தேவனாம்பட்டினம் ஊருக்குள்கடல்நீர்புகுந்து பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது. இதனை பார்த்த பொதுமக்கள் மற்றும் தேவனாம்பட்டினம் ஊர் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்து அனைவரும் பார்வையிட்டு சென்று வருகின்றனர்.

மேலும் கடற்கரை ஓரமாக தண்ணீர் உட்புகாத வகையில் கருங்கல்கள் கொட்டப்பட்டு வருகின்றன. அந்த பகுதியை தவிர்த்து மற்ற பகுதிகளில் வேகமாக மண் அரிப்பு ஏற்பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்து வருகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என நினைவு அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# நாகையில் ரூ.43 லட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளை



நாகை, ஜன.2

நாகைமாவட்டம்மணக்குடி பகுதியில் நகைக்கடைக்குள் புகுந்து ரூ.43 லட்சம் மதிப்புள்ள நகைகளை மர்மநபர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நகைக்கடையின் பூட்டை உடைத்த மர்மநபர்கள் கண்ணாடி பேழையில் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்த சுமார் 75 சவரன் நகைகளை கொள்ளை அடித்து சென்றிருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

இந்த கொள்ளை சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கன்னியாகுமரியில் கடல் சீற்றம் மழை காரணமாக படகு போக்குவரத்து தாமதம்



கன்னியாகுமரி, ஜன.2

கன்னியாகுமரி கடல் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவிடம் மற்றும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை படகில் சென்று சுற்றுலா பயணிகள் தினமும் பார்வையிட்டு வருகின்றனர். இதற்காக 3 படகுகள் காலை 8 மணி முதல் இடைவிடாது இயக்கப்பட்டு வருகின்றன.

சுனாமிக்கு பிறகு அமாவாசை மற்றும் பவுர்ணமியின்போது கடலில் அடிக்கடி சீற்றம் ஏற்பட்டு வருவதால் படகு போக்குவரத்து தொடங்குவதில் அவ்வப்போது பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

அதன்படி நேற்று அமாவாசை என்பதால் கடலில் மாற்றங்கள் காணப்பட்டன.

கடல் சீற்றமாக இருந்தது. அவ்வப்போது காற்றுடன் கூடிய மழையும் நீடித்தது. இதனால் காலை 8 மணிக்கு படகு போக்குவரத்து தொடங்கப்படவில்லை.

தற்போது பள்ளி விடுமுறை மற்றும் புத்தாண்டு கொண்டாட்டம் போன்ற காரணங்களால் ஏராளமான வடமாநில சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரி வந்து உள்ளனர். மேலும் விவேகானந்தர் நினைவிடம்திருவள்ளுவர் சிலை இடையே ரூ.37 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கண்ணாடி இழைகூண்டு பாலம் நேற்று திறக்கப்பட்டு உள்ளது. அதனை பார்ப்பதற்காகவும் ஏராளமானோர் கன்னியாகுமரி வந்திருந்தனர்.

அவர்கள் இன்று காலை 6 மணியில் இருந்தே படகு குழாமில் காத்திருந்தனர். ஆனால் 8 மணிக்கு படகு போக்குவரத்து தொடங்கப்படாததால் அவர்கள் படகு குழாமில் இருந்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட னர்.

இதன்காரணமாகஅங்கு பதட்டம் ஏற்பட்டது. இதனைதொடர்ந்துபோலீசார் அங்கு வரவழைக்கப்பட்டனர்.அவர்கள்தடுப்பு வேலி அமைத்து கூட்டத்தை சீர்படுத்தினர். இந்த சம்பவம் அங்கு சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மின் கொள்முதல் ஒப்பந்தத்தையும் ரத்து செய்யுங்கள்! தமிழக அரசுக்கு அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள்



சென்னை, ஜன.2

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ளஅறிக்கையில்,

தமிழ்நாட்டில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான மின்சார இணைப்புகளுக்கு ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தின் முதல் தொகுப்பிற்கான ஒப்பந்தம் அதானி குழும நிறுவனத்திற்கு வழங்கப்படவிருந்த நிலையில், அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும்,ஸ்மார்ட் மீட்டர் பொருத்த புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட இருப்பதாகவும் தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்திருப்பது. மக்களின் ரத்தத்தை உறிஞ்சி வசூலிக்கப்படும் மின் கட்டணத்தின் பெரும் பகுதி அதானி குழுமத்திற்கு தாரை வார்க்கப்படவிருந்தது தடுக்கப்பட்டிருப்பதும், அதற்காக பங்காற்றியதும் மகிழ்ச்சியளிக்கிறது.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கான ஒப்பந்தம் வழங்குவதற்கான நடைமுறையில் தொடக்கத்திலிருந்தே ஏராளமான குளறுபடிகள் நிகழ்ந்து வந்தன. ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோரப்பட்டன. அதன்பின்னர் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் ஆன நிலையில், இடைப்பட்ட காலத்தில் ஸ்மார்ட் மீட்டர்களின் விலைகள் எவ்வளவு குறைந்திருக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ளாமல் ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்வது எந்தவகையில்நியாயம்? இதனால் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பை யார் ஏற்பார்கள்? என்றுகடந்த 6ஆம் தேதி வினா எழுப்பியிருந்தேன்.

அண்டை மாநிலமான புதுச்சேரியில் ஒரு மீட்டருக்கான மொத்த செலவு ரூ.6169 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டு இரு ஆண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில், ஸ்மார்ட் மீட்டர்களின்விலைரூ.4,000 என்றஅளவுக்குகுறைந்து விட்டதாக கூறப்படுகிறது. அவ்வாறு இருக்கும் நிலையில், தமிழக அரசால் வழங்கப்படும் முன்பணம் தவிர, அதானி குழுமத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000 வீதம் 80 லட்சம் மீட்டர்களுக்கு வழங்கப்பட்டால் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணம் எத்தனை ஆயிரம் கோடி தாரை வார்க்கப்படுகிறது என்பதை எளிதாக கணக்கிட்டுக் கொள்ள முடியும் என்று வினா எழுப்பிய நான், அரசுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். அது இப்போது நடந்திருக்கிறது. இது பாட்டாளி மக்கள் கட்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்காக மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதும் தேவையற்றது. அவ்வாறு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால், மக்களின் பணம் அதானி குழுமத்திற்கு பதிலாக இன்னொரு நிறுவனத்திற்கு தாரை வார்க்கப்படுவதற்குத் தான் வழிவகுக்கும். எனவே, அந்த முடிவை கைவிட்டு ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை தமிழ்நாடு மின்சாரவாரியமே நேரடியாக செயல்படுத்த வேண்டும்.

அதேபோல், அதானி குழும நிறுவனம் தயாரிக்கும் சூரிய ஒளி மின்சாரத்தை இந்திய சூரிய ஒளி மின்னுற்பத்திக் கழகத்தின் வாயிலாக வாங்குவதற்காக வழங்கப்படும் கட்டணமான யூனிட்டுக்கு ரூ.2.61 என்பது மிகவும் அதிகம் என்பதாலும், இந்த ஒப்பந்தத்தின் பின்னணியில் தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகளுக்கு கையூட்டு கொடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்து அது தொடர்பாக அமெரிக்கநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாலும் அதற்கான ஒப்பந்தத்தையும் தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

# சென்னையில் வயிற்றுபோக்கு.. மதுரையில் வாக்கிங் நிமோனியா.. அச்சப்பட தேவையில்லை அமைச்சர் தகவல்



சென்னை, ஜன.2

பருவமழை காலங்களில் தொற்று நோய்கள் ஏற்படுவதுவழக்கம்.எனவே, இந்த காலகட்டங்களில் பொதுமக்களும் உஷாராக இருக்க வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தும்.

வழக்கம் போல் இந்த ஆண்டும் பருவமழை தொடங்கி முடியும் தருவாயை நெருங்கி கொண்டிருக்கிறது. ஆனால் இந்த காலகட்டத்தில் வழக்கமான நோய் தொற்றுகளும் ஏற்பட்டுள்ளன.

சென்னையில் வடகிழக்கு பருவமழையால் வயிற்றுப்போக்கு, உணவு ஒவ்வாமை போன்றவற்றால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உடல் நல பிரச்சினைகளால் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு வருபவர்களில் 40 சதவீதம் பேர் இத்தகைய பாதிப்புகளால் வருவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஜீரண மண்டலத்தை பாதிக்கும் இகோலி எனப்படும் பாக்டீரியா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வகை பாக்டீரியாக்கள் அசுத்தமான இறைச்சி, காய்கறி, பழங்கள், குடிநீர், பால் உள்ளிட்டவற்றின் மூலமாக மனித உடலுக்குள் புகுந்து விடுவதாக கூறுகிறார்கள் ஆய்வாளர்கள்.

மதுரை சுற்று வட்டாரங்களில் 5 முதல் 17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வாக்கிங் நிமோனியா என்ற புதியவகை தொற்று பரவி தாக்கி வருகிறது. காய்ச்சல், இருமல், சளி என்று மருத்துவமனைக்கு வரும் சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் வாக்கிங்நிமோனியாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மைக்ரோ பிளாஸ்மா நிமோனியா, கிளாடிமியா நிமோனியா, லெஜியோனல்லா வகை பாக்டீரியாக்கள்தான் காய்ச்சலை உருவாக்குகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் காற்றின் வழியே இந்த வகை பாக்டீரியாக்கள் பரவுவதாக கூறப்படுகிறது.

இந்த நோய் பெரியவர்களை தாக்கினால் ஆபத்தையும் பெரிய அளவில் ஏற்படுத்தும். சிறியவர்களை தாக்கினால் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருப்பதால் ஆபத்து குறைவு என்கிறார்கள்.

இது தொடர்பாக சுகாதாரத்துறைஅமைச்சர்மா.சுப்பிரமணியன்கூறும்போது, மழைக்காலங்களில்நோய் தொற்றுகள் ஏற்படுவது வழக்கம்தான். பொது சுகாதாரத் துறையினரின் தீவிரமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் இந்த ஆண்டு டெங்கு காய்ச்சல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களுக்கு தேவையான மருந்து, மாத்திரை கையிருப்பில் உள்ளது. பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்றார்.

# மதுரை, புதூர் தனியார் மருத்துவமனை நர்சுகள் தங்கும் விடுதியில் தீ விபத்து



மதுரை, ஜன.2

மதுரை மாநகர் புதூர் அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக வேறு பகுதிக்கு மாற்றப்பட்டது. இதனிடையே புதூர் பகுதியில் ஏற்கனவே செயல்பட்டு வந்த மருத்துவமனை கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் தற்காலிகமாக பிளாஸ்ட் ஆப் பாரிஸ் மூலம் செட் அமைக்கப்பட்டு அதில் செவிலியர்கள் சிலர் தங்கவைக்கப்பட்டு உள்ளனர்.

இந்தநிலையில் இன்று காலை செவிலியர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த அறையில் திடீரென ஏ.சி. எந்திரத்தில் ஏற்பட்ட மின் கசிவுகாரணமாகதீவிபத்து ஏற்பட்டது.

முதலில் புகை வெளியேறிய நிலையில் அதன் மூலம்தீப்பொறி உருவாகி தீயானது மளமள வென்று அனைத்து அறைகளுக்கும் பரவத்தொடங்கியது.

இதனையடுத்து அங்கு தங்கியிருந்த ஐந்து செவிலியர்கள் அவசர அவசரமாக வெளியேறினர். இதற்கிடையே தீ விபத்து ஏற்பட்ட மூன்றாவது மாடியில் இருந்து வானுயர எழுந்த புகையை பார்த்து அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் அவர்கள் உடனடியாக கீழே இறங்கி வந்த செவிலியர்களை மீட்டு வெளியே அனுப்பி வைத்தனர். அப்போது ஒரு நர்சிங் மாணவி மயக்கம் அடைந்ததார். பின்னா இயல்புநிலைக்குமாணவி திரும்பிய நிலையில் அருகில் உள்ள விடுதிக்கு அழைத்து செல்லப்பட்டார்.

இதற்கிடையே தீயானது வேகமாக பரவத் தொடங்கிய நிலையில் ஷெட் முழுவதிலும் கரும் புகை ஏற்பட்டு வெளியேறியது. தகவல்அறிந்த மதுரை தல்லாகுளம் தீயணைப்புத் துறையினர் 3 தீயணைப்பு வாகனங்களில் 10க்கும் மேற்பட்ட வீரர்கள் தீயை அணைத்து, செவிலியர்கள் தங்கும் அறையில் உள்ள கண்ணாடி மற்றும் ஷெட் ஆகியவற்றை உடைத்து கரும்புகையை வெளியேற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தில் செவிலியர்கள் 20க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டிருந்த அறையில் இருந்த அவர்களின் உடைமைகள் மற்றும் ஆவணங்கள் எரிந்து சேதமடைந்தன. தொடர்ந்து இரண்டு மணிநேர போராட்டத்திற்கு பிறகு ஆக்சிஜன் உதவியுடன் தீயணைப்பு வீரர்கள் புகையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். மதுரை புதூர் பகுதியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனை கட்டிடத்தில் தங்கி இருந்த செவிலியர்கள் அறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்ட சம்பவம் பரபரப்பு ஏற்படுத்திய நிலையில் நோயாளிகள் வெளியேற்றப்பட்டதால் யாருக்கும் எந்த காயமும் இன்றி தப்பினர்.

தீ விபத்து தொடர்பாக புதூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாடசாமி தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொங்கல் பரிசு தொகுப்பு பெறுவதற்கு ஜன.3 முதல் வீடு வீடாக டோக்கன் விநியோகம்: வரும் 9ம் தேதி முதல் ரேஷன் கடைகளில் பொருட்கள் கிடைக்கும்



சென்னை, ஜன.2

பொங்கல் பரிசு தொகுப்பு பெறுவதற்கு ஜனவரி 3ம் தேதி முதல் வீடு வீடாக டோக்கன் விநியோகிக்கப்படுகிறது. 9ம் தேதி முதல் ரேஷன் கடைகளில் பொருட்கள் வழங்கப்பட உள்ளது. பொங்கல் தொகுப்பை பெறுவதற்கு ஜனவரி 3ம் தேதி முதல் வீடு வீடாக சென்று டோக்கன் விநியோகிக்கப்படும் என்று தமிழக அரசு நேற்று தெரிவித்துள்ளது. ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் டோக்கன்வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டோக்கனில், குடும்ப அட்டைதாரர்கள் எந்த தேதியில், எத்தனை மணிக்கு வர வேண்டும் என்று குறிப்பிட்டு வழங்கப்பட உள்ளது.

டோக்கன் வழங்கப்படும் 3ம் தேதி அன்று, பாங்கல் பரிசு தொகுப்பு நகர்வு செய்தல் பணியும் நடைபெறும். இதைத்தொடர்ந்து, ஜனவரி 9ம் தேதி முதல் நியாய விலை கடைகளில்பொங்கல்தொகுப்பு வழங்கப்படும். ஒரு நாளுக்கு 200 குடும்ப அட்டைதாரர்கள் பரிசுத் தொகுப்பை பெறும் வகையில் டோக்கன் வழங்கப்பட உள்ளது. பொங்கல் தொகுப்பு பெறும் நாள், நேரம் உள்ளிட்டவைகளை தெளிவாக டோக்கனில் குறிப்பிட்டு வீடு வீடாக சென்று வழங்க ரேஷன் கடை ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வருகிற 3ம் தேதி டோக்கன் விநியோகம் மற்றும் 10ம் தேதி பொங்கல் தொகுப்பு வழங்க உள்ளதால் அன்றைய தினம் ரேஷன் கடைகளுக்கு விடுமுறை கிடையாது. இந்தவிடுமுறையை ஈடுசெய்யும் வகையில் வருகிற 15ம் தேதி (புதன்) மற்றும் 22ம் தேதி (சனிக்கிழமை) ஆகிய 2 நாட்கள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தடையை மீறி போராட்டம் நா.த.க. தலைவர் கைது



சென்னை, ஜன.2

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமையை கண்டித்து நாம் தமிழர் கட்சி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் ஆர்ப்பாட்டத்துக்கு போலீசார் அனுமதி வழங்கவில்லை. இதுகுறித்து பேசிய சீமான், அறவழியில் போராட கூட தமிழக அரசு அனுமதி அளிக்கவில்லை என கூறினார்.

இதனையடுத்து வள்ளுவர்கோட்டத்தில் அனுமதியின்றி போராட்டம் நடத்த முயன்ற நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை போலீசார் கைது செய்தனர்.

முன்னதாக, தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற நாம் தமிழர் கட்சியினரை போலீசார் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்னியாகுமரிக்கு மும்பை எக்ஸ்பிரஸ் ரெயிலில் கடத்தி வந்த 8 கிலோ கஞ்சா பறிமுதல்




நாகர்கோவில், ஜன.2

புனேவில் இருந்து கன்னியாகுமரிக்கு வந்த மும்பை எக்ஸ்பிரஸ் ரெயில் நேற்று இரவு கன்னியாகுமரி ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. பின்னர் ரெயில் அங்கிருந்து புறப்பட்டு நாகர்கோவில் ரெயில் நிலையத்தில் உள்ள யார்டுக்கு கொண்டு வரட்டது. அப்போது ரெயிலை சுத்தம் செய்யும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

முன்பதிவு செய்யப்படாத பெட்டி ஒன்றில் பார்சல் ஒன்று கிடந்தது. அதை எடுத்து பார்த்தபோது காக்கி கவரில் 8 பார்சல் இருந்தது. இது குறித்து நாகர்கோவில் ரெயில்வே போலீசாருக்கும், ரெயில்வே பாதுகாப்பு படை போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள்ஜெயபால், ரெயில்வே பாதுகாப்பு படை சப்இன்ஸ்பெக்டர் செரியன் தலைமையிலான போலீசார் அங்கு சென்று முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் கிடந்த பார்சலை கைப்பற்றினர்.

அந்த பார்சல்களை சோதனை செய்தபோது கஞ்சா பொட்டலங்கள் என்பதும், அதில் 8 கிலோ கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட கஞ்சா பொட்டலங்களை நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட 8 கிலோ கஞ்சா பொட்டலங்களையும் மதுவிலக்கு போலீசில் ஒப்படைத்தனர்.

மதுவிலக்கு போலீசார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கஞ்சாவை கடத்தி வந்தது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்புதான் திப்ருகரில் இருந்து கன்னியாகுமரிக்கு வந்த ரெயிலில் கடத்தி வந்த 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இந்தநிலையில் தற்போது 8 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# செங்குன்றம் அருகே டீக்கடை எரிந்தது



புழல், ஜன.2

சென்னை செங்குன்றம் அடுத்த விளாங்காடுப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சிறுகாவூர் பத்மாவதி நகர் அருமந்தை பிரதான சாலையை சேர்ந்தவர் துரைராஜ் (58). இவர் வீட்டின் முன் டீக்கடை நடத்தி வருகிறார். நேற்றிரவு கடையை மூடிவிட்டு சென்றபோது நள்ளிரவில் கடை தீப்பிடித்து எரிந்துள்ளது. தகவல் கிடைத்ததும் செங்குன்றம் தீயணைப்பு வீரர்கள் விரைந்துவந்து தீயை அணைத்தனர். இருப்பினும் டீக்கடையில் இருந்த பிரிட்ஜ் மற்றும் பாத்திரங்கள் சேதமானது. உடனடியாக தீ அணைக்கப்பட்டதால் மற்ற பகுதிகளுக்கு பரவவில்லை. இதுகுறித்து செங்குன்றம் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# கல்கி 2898 ஏடி': படப்பிடிப்பில் அமிதாப் பச்சனுக்கு ஏற்பட்ட காயத்தை நினைவுக்கூர்ந்த இயக்குனர் நாக் அஸ்வின்



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் கர்ணனாக நடித்த திரைப்படம் 'கல்கி 2898 ஏடி'. 600 கோடி ரூபாய் பட்ஜெட்டில் உருவான இத்திரைப்படத்தில், அஸ்வத்தாமாவாக அமிதாப்பச்சன், யாஸ்கினாக கமல்ஹாசன், கிருஷ்ணராக கிருஷ்ணகுமார் பாலசுப்பிரமணியன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உள்பட பல பிரபலங்கள் நடித்தனர். இப்படம் கடந்த ஜூன் மாதம் 27ம் தேதி தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் உள்பட பல்வேறு மொழிகளில் வெளியானநிலையில், உலகம் முழுவதும் ரூ,1,100 கோடிக்கு மேல் வசூல் ஈட்டியது. தற்போது இதன் 2ம் பாகப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இயக்குனர் நாக் அஸ்வின் ,'கல்கி 2898 ஏடி'படப்பிடிப்பில் அமிதாப் பச்சனுக்கு ஏற்பட்ட காயத்தை நினைவுக்கூர்ந்தார். இது குறித்து அவர் கூறுகையில்,

"படப்பிடிப்பில் அமிதாப் பச்சனுக்கு காயம் ஏற்பட்டது. அப்போது என்ன செய்வதென்றே எனக்கு தெரியவில்லை. இந்திய மக்கள் அனைவரும் எங்களை திட்ட போகிறார்கள் என்ற பயம் எனக்கு உண்டானது" என்றார்

# பொங்கலுக்கு விடாமுயற்சி ரிலீஸ் ஆகாது அதிர்ச்சி அளித்த லைகா நிறுவனம்




நடிகர் அஜித் குமார் இயக்குநர் மகிழ் திருமேனி கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் விடாமுயற்சி.

அஜித் குமாருடன், ஆரவ், அர்ஜுன், திரிஷா, ரெஜினா கசான்ட்ரா, நிகில் நாயர் மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு பணிகளை ஓம் பிரகாஷ் மேற்கொள்ள, படத்தொகுப்பு பணிகளை என்.பி. ஸ்ரீகாந்த் மேற்கொள்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது.

இப்படத்தின் டீசர் வெளியான நிலையில், இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் சில நாட்களுக்கு முன் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

படத்தின் டிரெய்லர் நாளை புத்தாண்டை முன்னிட்டு வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. இதனால் ரசிகர்கள் மிகவும் உற்சாகத்தில் உள்ளனர்.

விடாமுயற்சி பொங்கல் பண்டிகை அன்று வெளியாக உள்ளது என்ற நிலையில் தற்போழுது ரிலீஸ் தேதி தள்ளி வைப்பதாக லைகா நிறுவனம் அறிவித்துள்ளது.

அதில் கூறியிருப்பதாவது: சில தவிர்க்க முடியாத காரணங்களால் விடாமுயற்சி திரைப்படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகாது.

பிரேக் டவுன் ஹாலிவுட் படத்தின் உரிமையை படக்குழுவினரால் தற்போது வரை வாங்க முடியவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. மேலும் ரீலிஸ் தேதியை விரைவில் படக்குழு அறிவிப்பார்கள் என எதிர்ப்படுகிறது. இதனால் அஜித் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

# பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள 'டிராகன்' படத்தின் முதல் பாடல் புரோமோ அப்டேட்





தமிழ் சினிமாவில் 'கோமாளி' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன். இந்த படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அதன் பிறகு, கதாநாயகனாக நடித்து 'லவ் டுடே' படத்தை இயக்கினார். இப்படமும், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.இதைத் தொடர்ந்து விக்னேஷ் சிவன் இயக்கத்தில் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' என்ற படத்திலும், அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் 'டிராகன்' என்ற படத்திலும் நடித்து வருகிறார். ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் டிராகன் படத்திற்கு லியோன் ஜேம்ஸ் இசை அமைக்கிறார்.

இப்படத்தில் நடிக்கும் நட்சத்திரங்களின் கதாபாத்திர அறிமுக புகைப்படங்களை படக்குழு சமீபத்தில் வெளியிட்டது. மிஷ்கின், கவுதம் வாசுதேவ் மேனன் மற்றும் கே. எஸ். ரவிகுமார், ஜார்ஜ் மரியன், இந்துமதி, விஜே சித்து ஆகியோர் நடித்துள்ளனர். விரைவில் பாடல்கள் ரிலீஸாகும் எனப் படக்குழு அறிவித்துள்ளது. படம் காதலர் தினத்தன்று வெளியாகும் என சொல்லப்படுகிறது.

இந்நிலையில் இத்திரைப்படத்தின் முதல் பாடலின் புரோமோ வீடியோ நாளை வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. லியோன் ஜேம்ஸ் இசையில் அனிருத் முதல் பாடலை பாடியுள்ளார். பாடல் வரிகளை இயக்குனர் விக்னேஷ் சிவன் எழுதியுள்ளார்.

# பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ்: 3வது சுற்றுக்கு முன்னேறினார் மிர்ரா ஆண்ட்ரீவா



பிரிஸ்பேன்சர்வதேசடென்னிஸ்தொடர்ஆஸ்திரேலியாவில்நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷியாவின் மிர்ரா ஆண்ட்ரீவா சக நாட்டவரான அன்னா பிளிங்கோவா உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 64, 64 என்ற நேர் செட் கணக்கில் அன்னா பிளிங்கோவாவை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை; பேட்டிங் பட்டியலில் சரிவை சந்தித்த மந்தனா



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) மகளிர் ஒருநாள் கிரிக்கெட்டுக்கானதரவரிசைபட்டியலைவெளியிட்டுள்ளது. இதில் பேட்டிங் பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் லாரா வோல்வோர்ட் (773 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இலங்கையின் சமாரி அத்தபத்து (733 புள்ளி) ஒரு இடம் ஏற்றம் கண்டு 2ம் இடத்திற்கு வந்துள்ளார். இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா (720 புள்ளி) ஒரு இடம் சரிவை சந்தித்து 3ம் இடத்திற்கு வந்துள்ளார்.

இந்த பட்டியலில் வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஹேலி மேத்யூஸ் (652 புள்ளி) 6 இடம் ஏற்றம் கண்டு 7வது இடத்திற்கு வந்துள்ளார். ஒருநாள் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் (771 புள்ளி)முதல்இடத்திலும்,ஆஸ்திரேலியாவின்மேஹன்ஸ்கட்(704புள்ளி)2ம்இடத்திலும்,ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (698 புள்ளி) 3ம் இடத்திலும் உள்ளனர்.

இந்தப்பட்டியலில் இந்தியாவின் தீப்தி சர்மா (665 புள்ளி) ஒரு இடம் ஏற்றம் கண்டு 5ம் இடத்திற்கு வந்துள்ளார். இந்தப்பட்டியலிலும் வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் ஹேலி மேத்யூஸ் (616 புள்ளி) 2 இடம் ஏற்றம் கண்டு 7வது இடத்திற்கு வந்துள்ளார்.

ஒருநாள் ஆல்ரவுண்டர்கள் தரவரிசை பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் மரிசேன் கேப் (444 புள்ளி) முதல் இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (407 புள்ளி) 2ம் இடத்திலும், வெஸ்ட் இண்டீஸின் ஹேலி மேத்யூஸ் (401 புள்ளி) 3ம் இடத்திலும் உள்ளனர்.

# விஜய் ஹசாரே டிராபி: ஜெய்ஸ்வாலின் சாதனையை முறியடித்த ஆயுஷ் மத்ரே



விஜய் ஹசாரே தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று சி பிரிவில் மும்பை மற்றும் நாகலாந்து அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற நாகலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் விளையாடிய மும்பை அணி 50 ஓவர் முடிவில் 403 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஆயுஷ் மத்ரே 117 பந்தில் 181 ரன்கள் குவித்தார். நாகலாந்து தரப்பில் டிப் போரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து களமிறங்கிய நாகலாந்து அணி 50 ஓவரில் 214 ரன்கள் மட்டுமே எடுத்தது. அதிகபட்சமாக ஜெகதீஷா சுசித் 104 ரன்கள் எடுத்தார். மும்பை தரப்பில் ஷர்துல் தாகூர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனால் மும்பை அணி 189 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முன்னதாக இந்த போட்டியில் 117 பந்தில் 181 ரன்கள் குவித்த மும்பை அணி வீரர் ஆயுஷ் மத்ரே புதிய சாதனையை படைத்துள்ளார்.

அதன்படி லிஸ்ட் ஏ தொடரில் இளம் வயதில் 150 ரன்கள் மேல் குவித்த வீரரான ஜெய்ஸ்வாலின் உலக சாதனையை ஆயுஷ் மத்ரே முறியடித்துள்ளார்.ஜெய்ஸ்வால் 17 ஆண்டு 291 நாட்களில் இந்த சாதனையை படைத்தார். மத்ரே 17 ஆண்டுகள் 168 நாட்களில் இந்த சாதனையை படைத்துள்ளார். 2019ம் ஆண்டில் இந்த சாதனையை ஜெய்ஸ்வால் படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.